2011 ஜனவரி 10] [பேரவைத் தலைவர்]

7-1-2011 வெள்ளிக்கிழமையன்று மேதகு ஆளுநர் அவர்கள் உரையாற்றத் தொடங்கும்போது அவையிலிருந்த அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி உறுப்பினர்கள், இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் மற்றும் ம.தி.மு.க. கட்சி உறுப்பினர்கள் அவை மரபுகளையும், கண்ணியத்தையும், கட்டுப்பாட்டையும் மீறி ஆளுநர் உரைக்குக் குந்தகம் ஏற்படுத்தும் வகையிலும், பேரவையின் ஒழுங்கிற்கு ஊறு விளைவிக்கும் வகையிலும் ஆளுநரது உரையை படிக்கவிடாது விரும்பத்தகாத செயல்களில் ஈடுபட்ட உறுப்பினர்கள் அனைவரையும் அவையைவிட்டு வெளியேற்றும்படி அவைக் காவலர்களுக்கு உத்தரவிடப்பட்டது. என்னுடைய ஆணையை ஏற்று அவைக் காவலர்கள் தங்களது கடமையைச் செய்ய வந்தபோது, அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவைக் காவலர்கள் தங்கள் கடமையைச் செய்யவிடாமல் தடுத்ததோடு, அவர்களைத் தாக்கவும் முற்பட்டு, அவையில் ஒரு அசாதாரணமான சூழலை உருவாக்கும் உள்நோக்கில் செயல்பட்டுள்ளனர்.

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள் எனக்குக் கொடுத்துள்ள புகார் கடிதத்தில் தன்மீது வரம்பு மீறி நடந்துகொண்ட அவைக் காவலர்களைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார். 7-1-2011 அன்று அவையில் நடந்த நிகழ்வுகளை நான் நேரிடையாகப் பார்த்ததோடல்லாமல், இதுகுறித்த சட்டமன்ற நடவடிக்கை ஆதாரங்களையும் நான் ஆய்ந்ததில், அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களின் புகாருக்கு ஆதாரம் ஏதும் இல்லை. மேலும், அ.இ.தி.மு.க. உறுப்பினர்கள் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் உட்பட சிலர் அவைக் காவலர்களோடு வாக்குவாதத்தில் ஈடுபட்டு, அவைக் காவலர்களைத் தாக்கவும் முற்பட்டு அவையின் கண்ணியத்தையும் மரபையும் மீறிய செயல்களில் ஈடுபட்டது தெளிவாகிறது. சட்டப் பேரவை விதி 17-ன்படி இது நடவடிக்கைக்குரியது ஆகும். எனவே, இதுகுறித்து மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் ஒரு தீர்மானத்தை முன்மொழியலாம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

முற்பகல் 9-35

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"7-1-2011 வெள்ளிக்கிழமை அன்று மேதகு ஆளுநர் அவையில் உரையாற்றத் தொடங்கும்போது அப்போது அவையில் இருந்த

அ.இ.அ.தி.மு.க உறுப்பினர்கள், ம.தி.மு.க. உறுப்பினர்கள், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் மற்றும் இந்திய கம்யூனிஸ்டு உறுப்பினர்கள் ஒட்டுமொத்தமாக எழுந்து கூச்சலும், குழப்பமும் விளைவித்தும், அமைச்சர்களை நோக்கி ஆபாச மொழிகளில் உரத்த குரலில் பேசியும் மேதகு ஆளுநர் உரையாற்றும்போது உரையாற்ற முடியாமல் குந்தகம் விளைவித்துக்கொண்டிருந்தனர். இப்பேரவையில் அரசியலமைப்புச் சட்டப்படி மேதகு ஆளுநர் உரையாற்றுகையில் இடைமறித்து, குறுக்கீடு செய்து பேரவையின் ஒழுங்கிற்கு ஊறுவிளைவிக்கும் அ.இ.அ.தி.மு.க, ம.தி.மு.க., இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) மற்றும் இந்திய கம்யூனிஸ்டு ஆகிய கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களை அவையைவிட்டு வெளியேற்றுமாறு மேதகு ஆளுநர் அவர்களிடம் அனுமதியைப் பெற்றுக்கொண்டு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அவைக் காவலர்களுக்கு உத்தரவிட்டார்.

காவலர்கள் தங்களை நோக்கி வந்தபோதும், அவையை விட்டு வெளியேறாமல் குழப்பம் விளைவித்த உறுப்பினர்களை அவைக் காவலர்கள் வெளியேற்ற முற்பட்டபோதும், அவர்கள் இப்பேரவையின் இறையாண்மையையும், அதிகாரத்தையும் பாதிக்கும் வகையில் அவையின் மையப் பகுதிக்கு வந்து, அமர்ந்து, கூச்சல் எழுப்பி குழப்பம் விளைவித்தனர். அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களில் வெளியேற எதிர்ப்புத் தெரிவித்த சிலர் அவைக் காவலர்களைத் தாக்கினர். திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமனை அவைக் காவலர்கள் வெளியேற்ற முயற்சிக்கும்போது அவர் காவலர்களை கையை ஓங்கி அடித்ததும், காவலர் ஒருவரின் தொப்பியினைத் தட்டிப் பறித்ததும் அவர் முகத்திலும், முதுகிலும் மீண்டும், மீண்டும் வெறியுடன் தாக்கியதும், அவைக் காவலர்களை கடுஞ்சொல்லால் அச்சுறுத்தியதும் இப்பேரவையில் நடைபெற்ற கண்டனத்திற்குரிய செயல்களாகும். அ.இ.அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த திரு. டி. ஜெயக்குமார், திரு. சுப. வேலுமணி, திரு. கோ. அரி, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. எல். ரவிச்சந்திரன், திரு. வே. செந்தில் பாலாஜி, திரு. கு. பாண்டுரங்கன் ஆகியோர் சட்டமன்ற நெறிமுறைகளுக்கும், அவையின் கண்ணியத்திற்கும், ஒழுங்குக்கும் மாறாக நடந்து கொண்டதோடு, அவையின் உள்ளே காய்கறிகளை தட்டில் கொண்டு வந்தும், மாலையாக அணிந்து கொண்டு வந்தும் அவற்றை அவைக்குள் நாலா பக்கமும் வீசியெறிந்தனர். மேலும், தொடர்ந்து கோஷங்களையும், குழப்பத்தையும் ஏற்படுத்தினார்கள். திரு. சி.வி. சண்முகம் ஆளுநர்

2011 ஜனவரி 10] [பேராசிரியர் க. அன்பழகன்]

உரையின் நகலைக் கிழித்து அவையினர் மீது வீசினார். அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும், அவையில் இவ்வாறு சட்டமன்ற நெறிமுறைகளையும், மாண்பினையும் சற்றேனும் மதிக்காமல் முன்கூட்டியே திட்டமிட்டுக்கொண்டு வந்து வெறுக்கத்தக்க வகையில் செயல்பட்டதை இப்பேரவையில் உள்ள அனைத்து உறுப்பினர்களும், ஊடகத் துறையினரும் மற்றும் பார்வையாளர் மாடத்தில் இருந்த அனைவருமே கண்டுகொண்டிருந்தனர்.

அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலராகவும், இப்பேரவையின் இறையாண்மையின் சின்னமாகவும் விளங்கும் மேதகு ஆளுநர் இப்பேரவையில் உரையாற்ற வருகை தரும்போது இப்பேரவை உறுப்பினர்கள் அனைவரும் மதிப்பையும், மரியாதையையும் வழங்குவதோடு, கண்ணியமான முறையில் அனைவரும் நடந்துகொள்வது மிகவும் முக்கியமானது. பேரவையில் இத்தகைய விரும்பத்தகாத நிகழ்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்த உறுப்பினர்கள்மீது உரிய நடவடிக்கை எடுத்து தண்டனை அளிப்பதுதான் அவையின் கண்ணியத்தையும் இறையாண்மையையும் காப்பதாகும் என்று இப்பேரவை கருதுகிறது. எனவே, அரசியலமைப்புச் சட்டத்திற்கிணங்க மேதகு ஆளுநர் அவர்களுக்கு அளிக்கப்படவேண்டிய மதிப்பையும், மரியாதையையும் அளிக்காமல், கண்ணியத்தை சீர்குலைக்கும் வகையில் செயல்பட்டு அவையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்து, அவைக் காவலர்களை பணிசெய்ய விடாமல் தடுத்ததுடன் அவர்களைத் தாக்கியும் கூச்சலும், குழப்பமும் விளைவித்த திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. கோ. அரி, திரு. கு. பாண்டுரங்கன், திரு. சு.ப. வேலுமணி, திரு. டி. ஜெயக்குமார், திரு. எல். ரவிச்சந்திரன், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. செந்தில் பாலாஜி, திரு, சி.வி. சண்முகம் ஆகிய அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் 9 பேரையும் இந்த அவையிலிருந்தும், சட்டப் பேரவை உறுப்பினர்களின் உரிமைச் செயல்பாடுகள் அனைத்திலிருந்தும் இப்பேரவைக் கூட்டத் தொடர் முழுவதும் நீக்கி வைப்பது என்று இந்த அவை தீர்மானிக்கிறது."

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)*

முற்பகல் 9-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. கோ. அரி, திரு. கு. பாண்டுரங்கன், திரு. சு.ப. வேலுமணி, திரு. டி. ஜெயக்குமார், திரு. எல். ரவிச்சந்திரன், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. செந்தில் பாலாஜி, திரு. சி.வி. சண்முகம் ஆகிய அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் 9 பேரும், இந்த அவையிலிருந்தும், சட்டப்பேரவை உறுப்பினர் உரிமைச் செயல்பாடுகள் அனைத்திலிருந்தும் இப்பேரவைக் கூட்டத் தொடர் முழுவதும் நீக்கி வைக்கப்படுகிறார்கள். அவர்கள் அனைவரும் இப்பொழுதே வெளியேறுமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

அந்த 9 பேரும் முதலில் வெளியேறுங்கள். (குறுக்கீடுகள்). திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. கோ. அரி, திரு. கு. பாண்டுரங்கன், திரு. சு.ப. வேலுமணி, திரு. டி. ஜெயக்குமார், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. செந்தில் பாலாஜி, திரு. எல். ரவிச்சந்திரன், திரு. சி.வி. சண்முகம் ஆகிய அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் 9 பேரும் இந்த அவையை விட்டு வெளியேறலாம். இது பேரவையினுடைய முடிவு. நீங்களாக வெளியேறுகிறீர்களா அல்லது வெளியேற்ற வேண்டுமா? (குறுக்கீடுகள்) அவைக் காவலர்கள். (குறுக்கீடுகள்) அவைக் காவலர்கள். (கூச்சல்-குழப்பம்) (குறுக்கீடுகள்)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

திரு. வை. சிவபுண்ணியம், பேரவையினுடைய தீர்ப்பில் Point of Order எதுவுமில்லை உட்காருங்கள். (குறுக்கீடுகள்)